3 - JAN 1956
MADRAS

"கிராமோதய கதர் சங்கங்கள் முன்னேற வேண்டும்" Regd. No. M 6207

கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி
(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 | திருப்பூர் - டிசம்பர் 15 * 1953 * விலை 1 அணு | இதழ் 4

அணுகுண்டை கட்டுப்படுத்தினால் மட்டும் நம்பிக்கை பிறக்காது

[அமெரிக்காவில் செயல்பட்டு வரும் விஞ்ஞானத்தில் சமூகப் பொறுப்புகளை உணர்த்தும் கழகத்தின் (Society for Social Responsibility in Science (J. S. A.) செய்தித்தாள், அகில உலக விஞ்ஞான மேதை டாக்டர் அல்பர்டு ஐன்ஸ்டீனிடமிருந்து கீழ்க்கண்ட செய்தியை பிரசுரித்திருக்கிறது — ஆசிரியர்.]

யுத்த காலத்தில் கொலை செய்வது சாதாரண கொலையைக் காட்டிலும் சிறப்பானதல்ல. உலக நாடுகள் ஒத்துழைத்து தங்களுக்குள் தோன்றக் கூடிய வேற்றுமைகளை சட்ட பூர்வமான அடிப்படையில், அமைதியாக தீர்த்துக்கொண்டு, யுத்தத்தை கைவிடுவதற்கு தயாராக இல்லாதது வரை, அவை போர்க்கோலம் பூண்டவண்ண மிருக்கின்றன. சண்டையில் வெற்றிபெறுவதற்காக பிறநாடுகளைவிட பின்தங்கிவிடக்கூடாது என்ற எண்ணத்துடன், கோரமான ஆயுதங்களையும் தயாரித்து, சேகரித்து வைக்க நிர்ப்பந்தப்பட்டுள்ளதாக, ஒவ்வொரு நாடும் கருதுகின்றன. இந்த நிலை தவிர்க்க முடியாத போர்களையே தோற்றுவிக்கிறது. இன்றுள்ள சூழ்நிலையில் யுத்தம் என்பதன் பொருள் "எங்கும் பாழ்" என்பதே.

ஆகையால், அணுகுண்டு போன்ற சில குறிப்பிட்ட ஆயுதங்களை தடை செய்ய முயற்சிப்பதால் மட்டும் நம்பிக்கை ஏற்பட வழியில்லை.

தீவிரமான முடிவு செய்து யுத்தத்தையும், யுத்த அபாயத்தையும் நீக்கினால்தான் நலம்.

இந்த லக்ஷியத்திற்காக எல்லோரும் பாடுபட வேண்டும். இந்த லக்ஷியத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் நிர்ப்பந்தப் படுத்துவதற்கு யாரும் தம்மை அனுமதிக்கலாகாது.

நமது வாழ்நாளில் தோன்றிய மிகப் பெரிய அரசியல் மேதையான காந்தி வழிகாட்டியுள்ளார். சரியான வழியை மட்டும் தெரிந்துகொண்டால் மனிதன் எத்தனை தியாகம் செய்ய தயாராக முடியும்என்பதையும் காண்பித்துள்ளார். அவர் இந்திய விடுதலைக்காக செய்த வேலைகள், மனிதனின் அசைக்க முடியாத நம்பிக்கையில் தழைத்த ஆன்ம சக்தி, சர்வ வல்லமையும் படைத்த படை பலத்தைக் காட்டிலும் வன்மையானது என்பதை விளங்கச் செய்கிறது.

— அல்பர்டு ஐன்ஸ்டீன்

★

கிராமக் கைத்தொழில்களும்-இந்திய அரசாங்கமும்!

[சென்ற ஆகஸ்டு 6-ந் தேதி இந்திய பார்லிமெண்ட் சபையில் கீழ்க்கண்ட கேள்விகளுக்காக வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாசாரியார் அளித்திருக்கும் பதில்கள் சர்க்கார் கிராமக் கைத்தொழில்களுக்கு கொடுத்துவரும் பேராதரவை? குறிப்பிடுகிறது. ஒடுங்கியும், ஒடுங்கி வருபவையுமான இந்த சிறு தொழில்கள்பால் அரசாங்கத்திற்குள்ள பொறுப்பை எவ்வளவு லேசாக மதிக்கப்படுகிறது என்பதைக்கண்டு நாம் வருந்துகிறோம். ஆசிரியர்]

கேள்வி 122 (ஆகஸ்டு 6, 1953)

ஸ்ரீ தாபி:- (கேள்வி) தொழில், சப்ளை மந்திரியவர்கள் சர்க்கார் இலாக்காக்களின் தேவைக்காக கையினால் செய்த காகிதம் வாங்குவது சம்பந்தமாக சர்க்காரின் கொள்கை என்ன என்பதற்கு தயவுசெய்து பதிலளிக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீ சர்தார் ஸ்வர்ண்சிங்:- (பதில்) இந்திய சர்க்காரின் முழு உத்தியோகப் பற்றற்ற கடிதப் போக்குவரத்துகளுக்கு கையினால் செய்த காகிதத்தையே உபயோகிப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ தாபி:- (கேள்வி) 1951-52 வருடத்திலும் 1952-53-ம் மொத்தம் சர்க்கார் இலாக்காக்களுக்காக கொள்முதல் செய்த காகிதம் எவ்வளவு?

ஸ்ரீ சர்தார் ஸ்வர்ணசிங்:- (பதில்) 1951—52-ல் சுமார் ரூ. 4½ கோடி பெருமானமுள்ள காகிதம். 1952—53-ல் சுமார் ரூ. 5 கோடி பெருமானமுள்ள காகிதம்.

ஸ்ரீ தாபி:- (கேள்வி) 1951—52 வருடமும் 1952–53 வருடமும் சர்க்கார் இலாக்காக்களுக்காக வாங்கிய கைக் காகிதம் எவ்வளவு?

ஸ்ரீ சர்தார் ஸ்வர்ணசிங் (பதில்) 1951 – 52-ல் ரூ. 90,500. 1952–53ல் முற்றிலும் வாங்கப்படவில்லை. முன்வருடத்திய கையிருப்பே போதிய அளவு கைவசமிருந்தது.!!

★

பொருளாதார சிக்கனம்? ஒரு சீரிய உதாரணம்!

மலிவுப்பொருள்களின் மாயை.

பொருளாதார சிக்கனம் என்பது வாங்கும் பொருட்கள் அனைத்துக்கும் குறைவான விலை கொடுப்பது என்பது மட்டுமல்ல.

சர்க்காருக்கு தேவையான ஒருபொருள் வெளிநாட்டில் மலிவாகக் கிடைக்கும்; அதே பொருளுக்கு உள்நாட்டில் அதிக விலையையும் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால் சர்க்காருக்கு உள்நாட்டுச் சரக்கை அதிக விலைகொடுத்தும் வாங்குவதுதான் நலம். ஏனெனில் அவ்வாறு உள்நாட்டில் செலவிடப்படும் பணம் இங்கேயே கைம்மாறிக்

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

கிராமோதயம்
டிசம்பர் 15 1953

கிராமோதய கதர் சங்கங்கள்: முன்னேறவேண்டும்

[சென்ற ஆறு மாத காலத்தில் தமிழ் நாடெங்கும் சுமார் 170 கிராமோதய கதர் சங்கங்கள் தோன்றி செயலாற்றி வருகின்றன. அவை தற்சமயம் நடைபெற்று வரும் கதர் வேலைகளை ஏற்று ஸ்தல நிர்வாகத்தில் நடத்தப்படும் ஒரு முறை மாற்றத்தை செய்திருப்பதாகவே கருதவேண்டும். ஆங்காங்கு தூசி படிந்து அட்டத்தில் கிடந்த ராட்டைகள் இன்று ஓம்கார நாதம் முழக்கி சுழன்று வருகின்றன. ஆனல் ஜீவனில்லாத கிராமங்களில் இதயத் துடிப்பு ஏற்பட ஏரோசை வலுக்கவேண்டும். விவசாயம் தழைக்க வேண்டும். மடமையிருள் நீங்கவேண்டும். இவைகளை படிப்படியாக கிராமோதய சங்கங்கள் செய்ய வேண்டும். ஆசிரியர்]

தற்கால வேலைகள்

தற்சமயம் கிராமோதய கதர் சங்கங்கள் செய்துவரும் வேலைகள் முக்கியமாக கீழ்க்கண்டவைகளே என்று கூறலாம்.

1) நூற்பு நடைபெறும் கிராமங்களில் கதர் வேலை சம்பந்தமான நிர்வாக பொறுப்புகளை கிராம மக்களே மேற்கொண்டுள்ளார்கள்.

2) நூற்போர் கிராமங்களில் அதிகமான கதர் விற்பனை செய்ய முயற்சி செய்யப்படுகிறது.

3) முன்பு நடைபெற்று வந்த நூற்பைக் காட்டிலும் அதிகமாக நூற்பு நடைபெற்று வருகிறது.

4) கிராமங்களில் நூற்கப்படும் நூல் சர்க்கா சங்கக் கிளைகளில் நெசவு செய்வதற்காக அனுப்பப்பட்டு வந்தது. தற்சமயம் அதே கிராமங்களில் நெசவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

கிராமத்தில் எல்லா வேலைகளும்

கதர் வேலையை பொறுத்த வரை கிராமங்களில் கிடைக்கக் கூடிய வசதிகளை பயன்படுத்தி நூல், கதர் முதலியன சாயம் போட்டு, அச்சடிக்கும் முயற்சியும் தோன்றினல், கிராமங்களிலேயே பருத்தி சாகுபடி முதல் சாயமிட்ட கதர் தயாராகும் வரை சகலவித வேலைகளும் நடைபெறலாம், என்பதை எளிதாக ருஜுப்படுத்தும்.

கிராமாபிவிருத்தி வேலைகள் எங்கே?

ஆனல் கிராமாபிவிருத்தி நோக்கோடு, கிராமத்தில் பரிபூர்ணமாக வேலையில்லாத்தின் டாட்டத்தை போக்குவதற்காக, கிராம ராஜ்யம் தோற்றுவிக்கும் பொருட்டு, இதர கிராமக் கைத்தொழில்கள், கிராம சேவை, ஆதாரக்கல்வி, விவசாய சீர்திருத்தம், முதலிய வேலைகளுக்காக, கிராமோதய கதர் சங்கங்கள் என்ன செய்கின்றன, என்ற கேள்வி சகஜமாக எழுகிறது. நாம் என்ன செய்ய விரும்பினுலும் அதை கிராம ஜனங்கள் மூலமாக, கிராம மக்கள் பொறுப்பில், அவர்களுடைய நிர்வாகத்தில் நடைபெறச் செய்ய வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இந்த லக்ஷியம் "கிராமோதய கதர் சங்க" விதிகளிலும் இருக்கிறது. சர்க்கா சங்கத்தின் பழைய வேலைகள் நடைபெற்று வந்த இடங்களில் இப்பொழுது இந்த திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஆகையால் கிராம ஜனங்கள் முதன் முதலில் இந்த கதர் வேலையையே ஏற்று நடத்துவது இயற்கையே.

சில முயற்சிகள்

ஆனல் ஆங்காங்கு சில கிராமோதய கதர் சங்கங்களில் எண்ணை ஆட்டுவதற்கு நாட்டுச் செக்குகள் போடும் விஷயம் கவனத்திலிருந்து வருகிறது. ஒரு சங்கத்தில் அறுவடை காலத்தில் தான்யம் சேகரித்து வைத்து, கிராமத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்பொழுது இந்த தானியம் விநியோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆங்காங்கு கிராமோதய கதர் சங்கங்கள் சிறு தொகைகள் நன்கொடை வசூலித்தும், தேவஸ்தானங்கள், பொது நிதிகளிலிருந்து கடன் வாங்கியும் கிராமோதய கதர் சங்க வேலைகளுக்கு மூலதனம் தயாரித்துள்ளனர்.

காலக்கிரமத்தில் இந்த கிராமோதய கதர் சங்கங்கள் கதர் வேலைகளுடன் கீழ்க்கண்ட வேலைகளையும் படிப்படியாக செய்வதற்கு முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் படி

ஆரம்பத்தில் நூற்பு அபிவிருத்தி. பிறகு நெசவு செய்வதற்கு ஏற்பாடு; பிறகு கதர் நூல் கதர் சாயம் போடுவதற்கும், அச்சடிப்பதற்கும் கிராமத்திலேயே ஏற்பாடு செய்தல். இவைகளோடு கிராமத்திற்குத் தேவையான பருத்தி சாகுபடிக்கு முயற்சிகள் செய்துவரும்.

இரண்டாம் படி

கதர் வேலையில் பணம் ஈடுபடுத்தி ரொக்கமாக கொடுத்தல், வாங்கல்களை குறைத்து பண்டமாற்று முறைகளை அமுலுக்கு கொண்டுவரும்.

மூன்ரும் படி

எண்ணை ஆட்டுவதற்கு செக்கு, நெல்குத்துவதற்கு திருகைகள், ஊரல்களை மீண்டும் இயக்குதல், மண்பாண்டம், செங்கல், நாட்டு ஓடு முதலிய தொழில்களை தோற்றுவிப்பது அல்லது வளர்ப்பது, தேனீ வளர்த்தல், பனை வெல்லம் காய்ச்சுதல் முதலிய கைத்தொழில்களில் சாத்தியமானவற்றை எல்லாம் துடங்குதல்.

நான்காம் படி

மில் பொருட்களை அகற்றி உணவுப் பொருட்களில் குவியல் முறை தொழில்களை கைவிடும்படி பிரசாரம் செய்தல்.

ஐந்தாம் படி

கிராமப் பள்ளிக்கூடங்களில் நூற்பும், நெசவும் ஆரம்பித்து, நடத்துவதற்கு விசேஷ முயற்சி எடுத்தல்.

ஆரும் படி

பள்ளிக்கூடங்களிலும், கிராமத்திலும் துப்புறவு; கலவை உரம் தயாரிப்பதற்கும், மல ஜல சுத்திக்காகவும் கிராம கக்கூஸ்கள் அமைத்தல்.

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

3 - JAN 1956 MADRAS

கிராமோதய கதர் சங்க வேலைகள். (திருப்பூர் விபாக்)

(1953 நவம்பர் 20 தேதி முடிய.)

கிராமோதய கதர் சங்கங்கள்.	நூல் கொள்முதல். சிட்டம். எண்.	நூல் கொள்முதல். கிரயம். ரூ.	நூற்போர் கதருக்காக டிபாசிட் ரூ.	நூற்போர் பஞ்சு விற்பனை, ரூ.	நூற்போர் கதர் விற்பனை. ரூ.	கதர் விற்பனை. இதரர். ரூ	நூற்போருக்கு ரொக்கம் கூலி கொடுத்தது ரூ.	கதர் உற்பத்தி பெருமானம். ரூ.
இருகூர்	—	—	—	—	130	—	—	—
இச்சிப்பட்டி	4,550	1,066	473	286	477	76	216	649
உச்சனம்வலசு	13,067	3,052	1,150	920	994	542	462	—
வெள்ளியம்பாளையம்	1,899	445	235	141	271	—	52	—
குள்ளக்காளிபாளையம்	7,912	1,780	779	495	857	75	400	896
நொச்சிப்பாளையம்	7,492	1,743	653	557	599	410	193	956
கொத்தனூர்	19,393	4,532	1,286	1,261	923	1,252	946	1,870
செங்காட்டூர்	4,346	1,019	493	317	483	—	168	222
துலுக்கன்வலசு	34,698	7,595	3,375	2,487	2,534	452	17,34	6,531
முதலிபாளையம்	18,846	4,049	1,543	1,413	1,239	1,503	1,092	4,682
வானவராய நல்லூர்	25,228	5,650	2,437	1,790	2,361	746	1,423	5,142
பாறவலசு	2,558	600	249	238	85	216	113	—
செம்மங்காளிபாளையம்	7,705	1,792	824	592	709	37	376	—
ஆறுதொழுவு	4,025	947	434	333	306	148	180	—
சேடம்புதூர்	4,170	977	487	377	407	55	113	—
முத்துப்புலவன்வலசு	2,278	534	207	232	164	—	94	—
குள்ளம்பாளையம்	1,621	329	143	113	—	—	72	—
அ. வேலாயுதம்பாளையம்	989	232	127	74	115	—	24	—
காட்டூர் புதூர்	5,323	1,248	570	487	—	—	138	—
வஞ்சிபாளையம்	2,461	577	253	215	—	—	80	60
கத்தாங்கண்ணி	3,833	902	464	282	491	—	156	—
சடையபாளையம்	12,470	2,934	1,534	714	1,659	—	686	—
மரவபாளையம்	3,001	706	354	199	399	—	153	—
செங்காளிபாளையம்	4,679	1,101	535	316	592	—	250	—
காஞ்சிபுரம்	4,889	1,153	658	347	742	—	148	—
ஜோத்தியம்பட்டி	3,695	860	351	263	357	—	246	—
கண்ணுங்கோயில்	4,050	953	599	231	518	—	124	—
சோமன்கோட்டை	9,316	2,192	1,103	1,044	1,093	—	301	3,991
குமாரகவுண்டன்வலசு	10,914	2,568	1,216	1,145	1,373	—	368	4,551
பெரியாரிப்பட்டி	3,995	940	396	354	329	225	165	—
கள்ளிப்பாளையம்	5,036	1,185	519	443	411	103	?	
வாவிபாளையம்	8,912	2,097	773	735	825	146	?	193
ராமன்பாளையம்	5,814	1,368	404	501	441	205	?	
நாதகவுண்டன்பாளையம்	4,624	1,088	431	390	318	110	?	
கோப்பம்பாளையம்	4,407	1,037	972	451	1,393	—	682	—
பதுப்பாளையம்	1,296	305	218	113	247	—	142	—
திப்பம்பாளையம்	9,801	2,306	876	799	767	—	314	—
தாமரைக்காட்டுவலசு	6,392	1,504	682	592	622	—	174	—
சூரியப்பம்பாளையம்	10,549	2,482	778	980	1,149	—	325	—
தட்டாம்பாளையம்	2,606	787	289	300	287	228	9	—
மொத்தம்....	2,88,840	66,641	28,870	22 527	26,667	6,529	12,119	29,743

குறிப்பு:- 1) ? இந்த அடையாளமிட்ட புள்ளி விபரம் கிடைக்கவில்லை என்பதை குறிப்பிடுகிறது

2) இவைகளைத் தவிர 10 கிராமோதய சங்கங்களில் ரூ. 671 பெருமானமுள்ள நூற்புக் கருவிகளும் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

3) கதர் நெசவு செய்யும் சங்கங்கள் நெசவுக் கூலியாக ரூ. 4914/-தறிகாரர்களுக்கு கொடுத்துள்ளன.

4) எல்லா சங்கங்களிலுமாக நிர்வாக செலவுகள், போக்குவரத்து செலவுகள், உற்பத்தி செலவுகள் யாவுமாக மொத்தம் ரூ. 2109/-செலவாகியுள்ளது.

— ப. கோவிந்தசாமி

3-JAN 1956
MADRAS

(13-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டிருப்பதால் மக்களின் வாங்கும் சக்தியும், அதன் பயனாக வரி செலுத்தும் சக்தியும் பாதிக்கப் படுவதில்லை. இக்கொள்கை உள்நாட்டுச் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்கவும், உள்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கும் உதவுகிறது. வெளிநாட்டு மலிவுப்பொருளை வாங்குவதின் மூலம் மக்களின் வாங்கும் சக்தியே வெளிநாட்டுக்குப் போய்விடுகிறது.

சர்க்கார் க...ன் விளைவுகள்.

சர்க்கார் செலவுகள் பலவற்றையும், சர்க்கார் வாங்கும் பொருட்களின் ஆயுட்காலம் என்ன என்பதைப் பார்த்து நிச்சயிக்கப்படுகின்றது. இதற்கிணங்க அதிக நாட்களுக்கு உழைக்கக்கூடிய வெளிநாட்டுப் பொருள்கள் வாங்கப் பெறுகின்றன. இதனால் விளையும் அனர்த்தங்கள் பல, மக்களிடம் இருந்து வரியாக வசூல் செய்யப்படும் சர்க்கார் வருமானத்தை, மக்கள் வருமானத்தை அதிகரிக்கத் தக்க வகையில் செலவு செய்வதே மக்களுக்கும், சர்க்காருக்கும் பயன்தரக்கூடிய வழி.

காடுகளில் இரும்புக்கம்பங்கள்.

உதாரணமாக நமது தேசத்தின் மலங்காடுகளில் கூட, ரயில் பாதைகளுக்கு ஓரமாகவும் மற்றும் நாட்டப்பட்டுள்ள லட்சக்கணக்கான தந்திக் கம்பங்கள் எல்லாம் உருக்கு அல்லது இரும்பினால் செய்யப்பட்டதாக இருக்கின்றன. 'நமது தேசத்தில் மரத்திற்கு எவ்வித பஞ்சமும் இல்லை.'

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கூட

ஆனால் உலகிலேயே தொழில், வர்த்தகம், பொருளாதார ரீதியில் குபேர சம்பத்து படைத்தவைகளாக கருதப்படும்' அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இந்த தந்திக் கம்பங்கள் பட்டண பிரதேசங்களில் தவிர மற்ற எங்கும் மரத்தினாலேயே நாட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் உலகிலேயே மிகமிக ஏழை தேசங்களில் ஒன்றாகிய நமது நாட்டில் வெளிநாட்டு உலோகக் கம்பங்களை நாட்டப்பட்டிருக்கிறது.

விந்தையும்—விளக்கமும்

இந்த விந்தைக்கு விளக்கமளிக்கும் பொழுது இரும்புக்கம்பங்கள் மரக் கம்பங்களைக் காட்டிலும் அதிக நாட்கள் நிலைத்திருக்கும் என்று கூறப்படுகிறது. தற்காலத்தில் ரசாயனப் பக்குவங்கள் மூலம் மரத்தையும் சிறு கிருமிகள் சேதப்படுத்தா வண்ணம் பாதுகாக்க முடியும்.

பொதுஜன பொருளாதார ரீதியிலும் இது தவறாகும். நமது தேசத்தில் போதிய காடுகள் இருக்கின்றன. அவைகளிலிருந்து பலதரப்பட்ட மரக் கம்பங்களும் தயாரித்து உபயோகப்படுத்தலாம். இதனால் காடுகளில் இந்தக் கம்பங்களை வெட்டி, சீர்படுத்தி, அவைகளைப் பக்குவப்படுத்தும் தொழில்களில் ஏராளமான மக்களுக்கு வேலை கிடைக்கும். இரும்புக்கம்பங்களைக் காட்டிலும் மரக் கம்பங்கள் குறைந்த நாட்களுக்குத் தான் நிலைக்க முடியும். ஆனால் அதேபோல் மரக் கம்பங்களின் விலையும் மலிவாகும். அடிக்கடி மரக் கம்பங்களை மாற்றுவதினால் மக்களுக்கு வேலையும், அதன் மூலம் வாங்கும் சக்தியும் பரவுமாதலால் நாட்டின் பொருளாதார நிலை திருந்தவே செய்யும்.!!

மத்திய மாகாண சர்க்கார்,

— கைத்தொழில் ஆராய்ச்சி கழகத்தின் ரிப்போர்ட்.

(14-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏழாம் படி

கிராமப் பள்ளிக்கூடத்தை ஆதாரப் பள்ளிக்கூடமாக மாற்றியமைத்தல். பள்ளிக்கூடம் இல்லாத கிராமத்தில் புதிய பள்ளிக்கூடம் ஆரம்பிக்க முயற்சி செய்தல். முதியோர் கல்வி, பெண்கள் கல்விக்கு விசேஷ ஏற்பாடு செய்தல்.

எட்டாம் படி

குறைந்த பக்ஷம் 10 அல்லது 12 ஏக்கர் நிலமாவது ஒவ்வொரு கிராமத்திலும் பொதுவான கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் செய்து அதன் வருமானத்தை கிராமாபிவிருத்திக்காக செலவுசெய்தல்.

ஒன்பதாம் படி

கிராமத்திலிருக்கும் சில்லரைக்கடைகள் தனி உடமைக் கடைகளாக இருப்பவைகளை கூட்டுறவு முறையில் பண்டகசாலைகளாக்குதல்.

பத்தாம் படி

கிராம நிலச்சீர்திருத்தமும், பங்கீடும்.

பதினோராம் படி

கோ சேவை.

பன்னிரண்டாம் படி

கிராமத்தில் எல்லோருக்கும் முழுநேர வேலை கொடுக்கும் பொருட்டு பூரண திட்டம் வகுத்தல்.

இந்த நடவடிக்கைகளை சூழ்நிலைக்கேற்றபடி முன்பின்னாக செய்யக்கூடும். ஆனால் இவை யாவும் ஷெ கிராமோதய கதர் சங்கங்களின் வேலைத் திட்டம் என்று கருதி படிப்படியாக நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுதே நமது லக்ஷியத்தை நோக்கி நாம் முன்னேற முடியும்.

—ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்படுகிறது.)

இந்த இதழில்

அணுகுண்டை கட்டுப்படுத்தினால் மட்டும் நம்பிக்கை பிறக்காது — அல்பர்டு ஐன்ஸ்டீன் 13

கிராமக் கைத்தொழில்களும், மத்திய அரசாங்கமும் 13

பொருளாதார சிக்கனம் – ஒரு சீரிய உதாரணம் 13

கிராமோதய கதர் சங்கங்கள் முன்னேற வேண்டும் — கிருஷ்ணதாஸ் காந்தி 14

திருப்பூர் விபாக் கிராமோதய கதர் சங்கங்கள் வேலை அறிக்கை — ப. கோவிந்தசாமி 15

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.